விசைப்படகு மீனவர்களை கண்டித்து

நாகை பைபர் படகு மீனவர்கள் ஸ்டிரைக்

400 படகுகள் கரை நிறுத்தம்

நாகை, செப். 30- நாகை மாவட்டம் வேளாங்கண்ணி அருகே செருதூர் மீனவ கிராமத்தில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்க சென்ற பைபர் படகு மீனவர்கள் மீது நேற்று முன்தினம் நடுக்கடலில் அக்கரைப்பேட்டையை சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் தாக்குதல் நடத்தினர். இதில் செருதூரை சேர்ந்த 3 மீனவர்கள் காயமடைந்து நாகை அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுதொடர்பாக அக்கரைப்பேட்டை மற்றும் செருதூர் மீனவர்களுக்கு இடையே நேற்று செருதூரில் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இந்நிலையில் பைபர் படகு மீனவர்கள் மீது விசைப்படகு மீனவர்கள் தாக்குதல் நடத்தியதை கண்டித்து நாகை செருதூர் பகுதி மீனவர்கள் இன்று (30ம் தேதி) ஒருநாள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கரையோரத்தில் 400 பைபர் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 1,000 மீனவர்கள் மீன் பிடிக்க செல்லவில்லை. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய இழப்பீடு மற்றும் தாக்கிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென செருதூர் மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நாகை மாவட்டம் செருதூரில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பைபர் படகுகள்.

கடனை திருப்பி கேட்டதால் தகராறு

கம்பி முறுக்கும் ஊசியால் குத்தி கட்டிட தொழிலாளி கொலை

மேஸ்திரி கைது

திருவாரூர், செப். 30- நன்னிலத்தில் கடனை திருப்பி கேட்டதால் கட்டிட தொழிலாளியை கம்பி முறுக்கும் ஊசியதால் குத்தி கொலை செய்த மேஸ்திரியை போலீசார் கைது செய்தனர்.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் தாலுகா மாப்பிள்ளை குப்பத்தில் அறநிலையத்துறைக்கு சொந்தமான கைலாசநாதர் கோயில் உள்ளது. இந்த கோயில் மண்டபம் கட்டுமான பணி, ரூ.4 கோடியில் நடந்து வருகிறது. மதுரை திருமங்கலம் தாலுகா கொக்குளத்தை சேர்ந்த தொழிலாளிகள் பலர் பணியாற்றி வருகின்றனர். கொக்குளத்தை சேர்ந்த ரத்தினம் மகன் கிருபாகரன் (38) கம்பி பிட்டராகவும், ரவி மகன் நிவாஸ் (35) மேஸ்திரியாகவும் வேலை பார்த்து வந்தனர்.

கிருபாகரனிடம் நிவாஸ் கடனாக பணம் பெற்றிருந்தாக கூறப்படுகிறது. நேற்றிரவு கிருபாகரன் கடனாக கொடுத்த பணத்தை தரும்படி நிவாஸிடம் கேட்டார். அப்போது இருவருக்கும் தகராறு ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த நிவாஸ் தன்னிடம் இருந்த கம்பி முறுக்கு ஊசியால் கிருபாகரன் நெஞ்சில் குத்தினார். இதில் படுகாயமடைந்த கிருபாகரனை நன்னிலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்திலே கிருபாகரன் இறந்தார். தகவலறிந்து வந்த நன்னிலம் போலீசார் கிருபாகரன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்குப்பதிந்து நிவாஸை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

வல்லம் அருகே

மணல் கடத்திய 2 பேர் கைது

லாரி, பொக்லைன் பறிமுதல்

வல்லம், செப். 30- தஞ்சை மாவட்டம் வல்லம் அடுத்த தங்கப்பா உடையான்பட்டி காட்டு வாரியில் அனுமதியின்றி மணல் அள்ளப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் வல்லம் இன்ஸ்பெக்டர் ராம்தாஸ் தலைமையிலான போலீசார், தங்கப்பா உடையான்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் நேற்று ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்குள்ள காட்டுவாரியில் லாரியில் பொக்லைன் மூலம் மணல் அள்ளி கொண்டிருந்தது தெரிய வந்தது. போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று தங்கப்பா உடையான்பட்டியை சேர்ந்த எழில் (30), லாரி டிரைவர் அஜித்குமார் (30) ஆகியோரை கைது செய்தனர். மேலும் மணல் அள்ள பயன்படுத்திய பொக்லைன் இயந்திரம், லாரி பறிமுதல் செய்யப்பட்டது.



பறிமுதல் செய்யப்பட்ட லாரி.

சோழவந்தான் அருகே

வாகனம் மோதி மணப்பாறை வாலிபர் பலி

சோழவந்தான், செப். 30- சோழவந்தான் அருகே, டூவீலர் மீது அடையாளம் தெரியாத வாகனம் மோதிய விபத்தில், மணப்பாறை வாலிபர் பலியானார்.

மதுரை மாவட்டம், சோழவந்தான் அருகே உள்ள நகரிப் பகுதியில், நேற்று இரவு அடையாளம் தெரியாத வாகனம் மோதிய விபத்தில், டூவீலரில் வந்த வாலிபர் ஒருவர் இறந்து கிடந்தார். இது குறித்து அந்த வழியாகச் சென்றவர்கள், சோழவந்தான் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதன்பேரில், இன்ஸ்பெக்டர் ஆனந்தக்குமார், எஸ்.ஐ.முருகேசன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து, உடலை மீட்டனர். பின்னர் வாலிபரின் சட்டைப்பையில் இருந்த ஆதார் அட்டை மூலம், இறந்து கிடந்தவர், திருச்சி மாவட்டம், மணப்பாறையைச் சேர்ந்த மணி மகன் யுவராஜ் (21) என்பது தெரிய வந்தது. இது குறித்து அவரது உறவினர்களுக்கு போலீசார் தகவல் கொடுத்தனர். பின்னர் பிரேத பரிசோதனைக்காக சோழவந்தான் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து வழக்குப்பதிந்த போலீசார் யுவராஜ் மீது மோதிய வாகனம் எது, எதற்காக அவர் டூவீலரில் இந்த பகுதிக்கு வந்தார் என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

காரைக்குடி அருகே பிரேக் பழுதால் திடீர் புகை

பாதி வழியில் நின்ற பல்லவன் ரயில்

ஒரு மணி நேரம் தாமதத்தால் பயணிகள் பரிதவிப்பு

காரைக்குடி, செப். 30- காரைக்குடி அருகே, சென்னை சென்ற பல்லவன் எக்ஸ்பிரஸ் ரயிலில் பிரேக் பழுதால், திடீரென புகை வெளியேறி பாதியில் நின்றது. இதனால், பயணிகள் பரிதவித்தனர். பின்னர் பழுது சீரமைக்கப்பட்டு, ஒரு மணி நேரம் தாமதமாக புறப்பட்டுச் சென்றது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் இருந்து சென்னைக்கு இன்று காலை 5.35 மணியளவில் பல்லவன் எக்ஸ்பிரஸ் ரயில் புறப்பட்டுச் சென்றது. 18 பெட்டிகளைக் கொண்ட இந்த ரயில், பள்ளத்தூர் அருகே, செட்டிநாடு பகுதியில் சென்றபோது, கடைசி பெட்டிக்கு முந்தைய பெட்டியில் பிரேக் பழுது ஏற்பட்டு, அந்தப் பெட்டியில் இருந்து குபுகுபுவென புகை வெளியேறியது. இதனால், அந்த பெட்டியில் இருந்த பயணிகள் அச்சமடைந்தனர். இதையடுத்து பாதுகாப்பு கருதி உடனடியாக அந்த பகுதியில் ரயில் நிறுத்தப்பட்டது. மற்ற பெட்டிகளில் இருந்த பயணிகள் ரயில் எதற்காக நிற்கிறது என்ற காரணம் தெரியாமல் பரிதவித்தனர். பின்னர் காரைக்குடியில் இருந்து வந்த இன்ஜினியர்கள், புகை வந்த பெட்டியில் பழுதை சீரமைத்தனர். அதன்பின் ஒரு மணி நேர தாமதத்துக்கு பின் சரியாக 6.40 மணியளவில் மீண்டும் ரயில் புறப்பட்டுச் சென்றது.

கரூர் அருகே காரில் வந்து

ஆடு திருடிய பாஜ நிர்வாகி உள்பட 3 பேர் சிறையிலடைப்பு

மேலும் 2 பேருக்கு வலை

அரவக்குறிச்சி, செப். 30- கரூர் அருகே ஆடு திருடிய பாஜ நிர்வாகி உள்பட 3 பேரை போலீசார் நேற்றிரவு சிறையிலடைத்தனர்.

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி அருகே கடந்த 27ம் தேதி வயல் பகுதியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது அந்த வழியே காரில் வந்தவர்கள் திடீரென இறங்கி 10 ஆடுகளை பிடித்து காரில் போட்டு கொண்டு தப்பி ஓடிவிட்டனர். இது குறித்து சம்பந்தப்பட்ட ஆட்டின் உரிமையாளர்கள் அரவக்குறிச்சி போலீசில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து மர்ம நபர்களை தேடி வந்தனர்.

இந்நிலையில் அரவக்குறிச்சியில் போலீசார் நேற்று வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியே சந்தேகப்படும்படி வந்த காரை மறித்தனர். அப்போது காரிலிருந்த 5 பேரில் 2 பேர் இறங்கி தப்பி ஓடிவிட்டனர். தொடர்ந்து காரில் சிக்கிய 3 பேரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். இதில் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் உழவர் சந்தை என் ஜி ஓ காலனியை சேர்ந்த பாஜ இளைஞர் அணி கொடைக்கானல் ஒன்றிய செயலாளர் ரஞ்சித்குமார் (35), அவரது நண்பர்கள் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே கன்னிவாடி அடுத்த ஆழத்துரான்பட்டி மேற்கு தோட்டத்தை சேர்ந்த பொன்னுசாமி மகன் சதீஷ்குமார் (25), ஒட்டன்சத்திரம் தாலுகா கன்னிவாடி அருகே கசணம்பட்டி கிழக்கு தெருவை சேர்ந்த மாரியப்பன் மகன் சிவாகுமார் (எ) சிவா (23) என தெரியவந்தது. மேலும் இவர்கள் சொகுசு காரில் பல்வேறு பகுதிகளுக்கு சென்று ஆடுகளை திருடுவதை வழக்கமாக கொண்டுள்ளதும், கடந்த 27ம் தேதி 5 பேரும் காரில் வந்து அரவக்குறிச்சி பகுதியில் மேய்ந்துகொண்டிருந்த 10 ஆடுகளை திருடியதையும் ஒப்புக்கொண்டனர்.

இதுகுறித்து போலீசார் வழக்கு பதிந்து 3 பேரையும் கைது செய்தனர். இரவு அவர்களை கரூர் நீதிமன்ற நீதிபதி முன் ஆஜர்படுத்தி அங்குள்ள கிளை சிறையில் அடைத்தனர். மேலும் ஓடிய 2 பேரையும் போலீசார் தேடி வருகின்றனர்.

பாஜவில் முக்கிய நிர்வாகியாக செயல்பட்டு வருபவரே கும்பலாக சென்று ஆடு திருடிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆடு திருடியதாக கைதான பாஜக நிர்வாகி ரஞ்சித்குமார், சதீஷ்குமார், சிவக்குமார்.

SHRIRAM HOUSING FINANCE

ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்

தலைமை அலுவலகம்: நிலை–3, வோக்ஹார்ட்த் டவர்ஸ், கிழக்கு விங் C–2 பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை 400 051; **தொலைபேசி:** 022 4241 0400, 022 4060 3100; **இணையதளம்:** http://www.shriramhousing.in **பதிவு அலுவலகம்:** ஸ்ரீநிவாஸ் டவர், முதல் தளம், கதவு எண்.5,பழைய எண்.11, 2வது லேன், செனடாப் சாலை, ஆழ்வார்பேட்டை தேனாம்பேட்டை, சென்னை–600 018. **கிளை அலுவலகம்:** ஸ்ரீநிவாஸ் டவர், முதல் தளம், செனடாப் சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 018

பிற்சேர்க்கை-IV-A **விதி 8(6) விதிமுறையை காண்க** **அசையாச் சொத்துகள் விற்பனைக்கான ஏல அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட் வசம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ஸ்ரீராம் வீட்டுவசதி நிதி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் கையக சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும், கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்துகள் ஆனது, அட்டவணையில் குறிப்பிட்டவாறு, கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் வசமிருந்து ஸ்ரீராம் வீட்டுவசதி நிதி லிமிடெடுக்குரிய பாக்கி நிலுவைத்தொகையை மீட்பதற்காக **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் 4 நவம்பர் 2024 அன்று காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணிக்குள் மின்–ஏலத்தில்** விற்பனை செய்யப்படவுள்ளது. கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள், நிலுவைத்தொகை, அசையாச் சொத்தின் குறு விவரம் மற்றும் அதற்குரிய தெரிந்த வில்லங்கங்கள், சுவாதீனம் வகை, நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை மேலும் உயர்த்தும் தொகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர்கள்/உப-கடன்தாரர்கள் ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர்	13(2) கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	நிர்ணய விலை (₹) & ஏலம் உயர்த்தும் தொகை	முன்வைப்புத்தொகை செலுத்தும் விவரங்கள் (EMD) விவரங்கள்	ஏலத் தேதி & நேரம்	தொடர்பு நபர் மற்றும் பார்வையிடும் நாள்
திரு. விஜயராஜன் த/பெ. சுந்தரராஜன் எண்.6 சரவணா நகர், கோவிந்தபுரம், திருவிடைமருதூர் கும்பகோணம் தமிழ்நாடு 612101 **மேலும் முகவரி: திரு.விஜயராஜன் M/s தேவி அச்சகம் 348-J, மெயின் ரோடு, ஆடுதுறை, திருவிடைமருதூர் கும்பகோணம் தமிழ்நாடு 612104** **கதவு எண். 6, சரவணா நகர் விரிவாக்கம் II, கோவிந்தபுரம் கிராமம், திருவிடைமருதூர் தாலுக்கா, தஞ்சாவூர், தமிழ்நாடு, 612101** **திருமதி துர்கா தேவி க/பெ. திரு விஜயராஜன் எண்.6 சரவணா நகர், கோவிந்தபுரம், திருவிடைமருதூர் கும்பகோணம் தமிழ்நாடு 612101** **கதவு எண். 6, சரவணா நகர் விரிவாக்கம் II, கோவிந்தபுரம் கிராமம், திருவிடைமருதூர் தாலுக்கா, தஞ்சாவூர், தமிழ்நாடு, 612101** **சுவாதீனம் நாள் & சுவாதீனம் வகை** 27–04–2024 – அடையாளப்பூர்வ சுவாதீனம் **தெரிந்த வில்லங்கங்கள்** தெரிந்தது இல்லை	ரூ. 2464949/– (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தொன்பது மட்டும்) 07–02– 2024 தேதியின்று கடன் கணக்கு எண். SLPHTNUR0000139 இன் தொடர்பாக	ரூ. 4149500/– (ரூபாய் நாற்பத்தொன்று லட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து ஐநூறு மட்டும்) **ஏல உயர்வுத்தொகை** ரூ.20,000/– மற்றும் அத்தகைய மடங்குகளில் **முன்வைப்புத்தொகை (EMD) (₹)** ரூ.414950/– (ரூபாய் நான்கு லட்சத்து பதினான்காயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) **முன்வைப்புத்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி.** 30 அக்டோபர் 2024 நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை	முன்வைப்புத் தொகை இங்கே கீழே விவரங்கள் குறிப்பிட்டுள்ள கணக்கில் RTGS/ NEFT மூலம் செலுத்தப்பட வேண்டும்: **வங்கி பெயர்–** ஆக்சிஸ் வங்கி லிமிடெட் **கிளை–**பாந்த்ரா குர்லா வளாகம், மும்பை **வங்கி கணக்கு எண்–** நடப்பு கணக்கு எண் 911020045677633 IFSC குறியீடு– UTIB0000230	4 நவம்பர் 2024 & நேரம். காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை	PD வாடிக்கையாளர் சேவை எண் 022 –40081572. M.P.ஜானகிராமன் 9865091118 ஜேம்ஸ் கிளெமென்ட் +917200281906 சொத்து பார்வையிடும் நாள்: 30 அக்டோபர் 2024 நேரம் காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை

சொத்து விவரம்

அனைத்து துண்டு மற்றும் பகுதி தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் துணைப் பதிவு மாவட்டம், திருவிடை மருதூர் TK & SRO, கோவிந்தபுரம் கிராமம், சரவணா நகர் விரிவாக்கம் 2, SF எண்.224/3 நிலம் மற்றும் கட்டிடம் 2119 ½ சதுர அடி அல்லது 196.90 சதுர மீட்டரில் அமைந்துள்ள சொத்தின் எல்லைகள் : கிழக்கு: மணிவண்ணனுக்கு சொந்தமான சொத்து, மேற்கு: லேஅவுட் சாலை, வடக்கு: வீட்டு மனை எண்.5, தெற்கு: மதுரா நகர் அளவீடுகள்: வடக்கு–கிழக்கு மேற்கு–83 அடி, தெற்கு–கிழக்கு மேற்கு–76 அடி, மேற்கு–தெற்கு வடக்கு–26 அடி, கிழக்கு–தெற்கு வடக்கு–33 அடி மையத்தில் 21 அடி

கடன்தாரர்கள்/உப-கடன்தாரர்கள் ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர்	13(2) கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	நிர்ணய விலை (₹) & ஏலம் உயர்த்தும் தொகை	முன்வைப்புத்தொகை செலுத்தும் விவரங்கள் (EMD) விவரங்கள்	ஏலத் தேதி & நேரம்	தொடர்பு நபர் மற்றும் பார்வையிடும் நாள்
திரு.குழந்தைவேல் துரைசாமி (கடன்தாரர்) 1/39, நடுத்தெரு, வேப்பத்தன்குடி, திருவாரூர், தமிழ்நாடு 610202 **மேலும் முகவரி: கௌரி டெய்லர்ஸ், 6/23, பெருமாள் கோயில் வடக்குத் தெரு, புலிவலம், திருவாரூர், தமிழ்நாடு 610109** **கதவு எண். 1/39, EB சர்வீஸ் எண்.272, சர்வே எண். 79/31-150 சதுர மீட்டர்கள் சொத்து பழைய சர்வே எண். 79/2, திருவாரூர் பஞ்சாயத்து யூனியன், வேப்பந்தன்குடி பஞ்சாயத்து மற்றும் கிராமம், திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு 610202** **திருமதி.வேம்பு (உப-கடன்தாரர்) 1/39, நடுத்தெரு, வேப்பத்தன்குடி, திருவாரூர், தமிழ்நாடு 610202** **மேலும் முகவரி: கதவு எண். 1/39, EB சர்வீஸ் எண்.272, சர்வே எண். 79/31-150 சதுர மீட்டரில் சொத்து பழைய சர்வே எண். 79/2, திருவாரூர் பஞ்சாயத்து யூனியன், வேப்பந்தன்குடி பஞ்சாயத்து மற்றும் கிராமம், திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு 610202** **சுவாதீனம் நாள் & சுவாதீனம் வகை** 01–04–2024 – அடையாளப்பூர்வ சுவாதீனம் **தெரிந்த வில்லங்கங்கள்** தெரிந்தது இல்லை	ரூ. 1393932/– (ரூபாய் பதின்மூன்று லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்திரண்டு மட்டும்) 10–01–2024 தேதியின்படி	ரூ.1,987,280/– (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) **ஏல உயர்வுத்தொகை** ரூ.20,000/– மற்றும் அத்தகைய மடங்குகளில் **முன்வைப்புத்தொகை (EMD) (₹)** ரூ.198728/– (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு மட்டும்) **முன்வைப்புத்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி.** 30 அக்டோபர் 2024 நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை	முன்வைப்புத் தொகை இங்கே கீழே விவரங்கள் குறிப்பிட்டுள்ள கணக்கில் RTGS/ NEFT மூலம் செலுத்தப்பட வேண்டும்: **வங்கி பெயர்–** ஆக்சிஸ் வங்கி லிமிடெட் **கிளை–**பாந்த்ரா குர்லா வளாகம், மும்பை **வங்கி கணக்கு எண்–** நடப்பு கணக்கு எண் 911020045677633 IFSC குறியீடு– UTIB0000230	4 நவம்பர் 2024 & நேரம். காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை	PD வாடிக்கையாளர் சேவை எண் 022 –40081572. M.P.ஜானகிராமன் 9865091118 ஜேம்ஸ் கிளெமென்ட் +917200281906 சொத்து பார்வையிடும் நாள்: 30 அக்டோபர் 2024 நேரம் காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை

சொத்து விவரம்

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் பதிவு மாவட்டம், திருவாரூர் இணை–1 துணைப் பதிவு அலுவலகம், திருவாரூர் தாலுகா, திருவாரூர் பஞ்சாயத்து யூனியன், வேப்பந்தன்குடி பஞ்சாயத்து மற்றும் கிராமம் சர்வே எண். 79/31–150 சதுர மீட்டர் சொத்து பழைய சர்வே எண். 79/2 பின்வரும் எல்லைகளுக்குள்: கிழக்கு: குளம், மேற்கு: சாலை, வடக்கு: புருஷோத்தமன் சொத்து, தெற்கு: ராமலிங்கம் ஹவுஸ், கிழக்கு மேற்கு 28.8 மீட்டர் வடக்கில், தெற்கில் 27 மீட்டர், வடக்கு தெற்கு 6 மீட்டர் கிழக்கில், மேற்கில் 6.8 மீட்டர் மொத்தம் 150 சதுர மீட்டர் சொத்து மற்றும் கட்டிடம் EB சேவை இணைப்புடன் மற்றும் அதன் வைப்புகள் அனைத்து பாதைகள் மற்றும் வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது கதவு எண். 1/39, EB சேவை எண்.272.

கடன்தாரர்கள்/உப-கடன்தாரர்கள் ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர்	13(2) கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	நிர்ணய விலை (₹) & ஏலம் உயர்த்தும் தொகை	முன்வைப்புத்தொகை செலுத்தும் விவரங்கள் (EMD) விவரங்கள்	ஏலத் தேதி & நேரம்	தொடர்பு நபர் மற்றும் பார்வையிடும் நாள்
திரு. மகேந்திரன் த/பெ. சேகர் எண்.28 தாந்தோணி வடக்குத் தெரு, கரூர் - 639003 **திரு. சேகர் எண்.28 தாந்தோணி வடக்குத் தெரு, கரூர் - 639003** **திருமதி மங்கம்மாள் க/பெ. திரு. சேகர் எண்.28 தாந்தோணி வடக்குத் தெரு, கரூர் - 639003** **மேலும் இடம்: கிரீன் மொபைல்ஸ் உரிமை. திரு. மகேந்திரன் எண்.2 அண்ணாசாலை ரோடு, பேருந்து நிலையம் பின்புறம் கரூர் - 639001** **சுவாதீனம் நாள் & சுவாதீனம் வகை** 26–08–2024 – அடையாளப்பூர்வ சுவாதீனம் **தெரிந்த வில்லங்கங்கள்** தெரிந்தது இல்லை	ரூ.2334220/– (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து இருநூற்று இருபது மட்டும்) 06–06–2024 தேதியன்று கடன் கணக்கு எண். SLPHKRUR0000100 இன் தொடர்பாக	ரூ.65,65,000/– (ரூபாய் அறுபத்து ஐந்து இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்) **ஏல உயர்வுத்தொகை** ரூ.20,000/– மற்றும் அத்தகைய மடங்குகளில் **முன்வைப்புத்தொகை (EMD) (₹)** ரூ.656500/– (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐநூறு மட்டும்) **முன்வைப்புத்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி.** 30 அக்டோபர் 2024 நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை	முன்வைப்புத் தொகை இங்கே கீழே விவரங்கள் குறிப்பிட்டுள்ள கணக்கில் RTGS/ NEFT மூலம் செலுத்தப்பட வேண்டும்: **வங்கி பெயர்–** ஆக்சிஸ் வங்கி லிமிடெட் **கிளை–**பாந்த்ரா குர்லா வளாகம், மும்பை **வங்கி கணக்கு எண்–** நடப்பு கணக்கு எண் 911020045677633 IFSC குறியீடு– UTIB0000230	4 நவம்பர் 2024 & நேரம். காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை	PD வாடிக்கையாளர் சேவை எண் 022 –40081572. M.P.ஜானகிராமன் 9865091118 ஜேம்ஸ் கிளெமென்ட் +917200281906 சொத்து பார்வையிடும் நாள்: 30 அக்டோபர் 2024 நேரம் காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை

சொத்து விவரம்

அனைத்து துண்டு மற்றும் பகுதி கரூர் மாவட்டம், கரூர் மேற்கு துணைப்பதிவு மாவட்டம், கரூர் தாலுகா, தாந்தோணி கிராமம் SF எண்.216 அமைந்துள்ள சொத்தின் எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: பெரியசாமி த/பெ. பழனியப்பன் நிலம், மேற்கு: ஈசாநத்தம் தெற்கு வடக்கு பிரதான சாலை, தெற்கு: 20 அடி அகலம் கிழக்கு மேற்கு சாலை, வடக்கு: துரைராஜ் த/பெ.ஆறுமுகம் நிலம். சொத்தின் மொத்த அளவு 1550 சதுர அடி, அனைத்து வசதிகள் மற்றும் பாதை உரிமைகளுடன்.

கடன்தாரர்கள்/உப-கடன்தாரர்கள் ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர்	13(2) கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	நிர்ணய விலை (₹) & ஏலம் உயர்த்தும் தொகை	முன்வைப்புத்தொகை செலுத்தும் விவரங்கள் (EMD) விவரங்கள்	ஏலத் தேதி & நேரம்	தொடர்பு நபர் மற்றும் பார்வையிடும் நாள்
திரு. கிருஷ்ணமூர்த்தி (கடன்தாரர்) த/பெ. சுப்ரமணி எண்.46 வடக்கு தெரு, ராக் ஃபோர்ட், திருச்சி 620002 **திரு. கிருஷ்ணமூர்த்தி SR டுக்ஸ் அண்ட் டிரேடர்ஸ் எண்.8/7 பெரியபட்டி வடக்கு வடக்குபட்டி திருச்சி - 621306** **திரு.கிருஷ்ணமூர்த்தி மனை எண். 14, பிள்ளையார் கோவில் தெரு, பெருமாட்டுநல்லூர், செங்கல்பட்டு மாவட்டம் 603202** **திருமதி ஹேமலதா v(உப-கடன்தாரர்) க/பெ. திரு. கிருஷ்ணமூர்த்தி எண்.46 வடக்கு தெரு, ராக் ஃபோர்ட் திருச்சி - 620002** **திருமதி ஹேமலதா மனை எண். 14, பிள்ளையார் கோவில் தெரு, பெருமாட்டுநல்லூர், செங்கல்பட்டு மாவட்டம் 603202** **சுவாதீனம் நாள் & சுவாதீனம் வகை** 22–05–2024 – அடையாளப்பூர்வ சுவாதீனம் **தெரிந்த வில்லங்கங்கள்** தெரிந்தது இல்லை	ரூ.7100603/– (ரூபாய் எழுபத்து ஒன்று லட்சத்து அறுநூற்று மூன்று மட்டும்) 06– 04–2024 தேதியன்று கடன் கணக்கு எண். SHLHTRCY0000529 இன் தொடர்பாக	ரூ.99,19,250/– (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது லட்சத்து பத்தொன்பதாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) **ஏல உயர்வுத்தொகை** ரூ.20,000/– மற்றும் அத்தகைய மடங்குகளில் **முன்வைப்புத்தொகை (EMD) (₹)** ரூ.991925/– (ரூபாய் ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஒன்றாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தைந்து மட்டும்) **முன்வைப்புத்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி.** 30 அக்டோபர் 2024 நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை	முன்வைப்புத் தொகை இங்கே கீழே விவரங்கள் குறிப்பிட்டுள்ள கணக்கில் RTGS/ NEFT மூலம் செலுத்தப்பட வேண்டும்: **வங்கி பெயர்–** ஆக்சிஸ் வங்கி லிமிடெட் **கிளை–**பாந்த்ரா குர்லா வளாகம், மும்பை **வங்கி கணக்கு எண்–** நடப்பு கணக்கு எண் 911020045677633 IFSC குறியீடு– UTIB0000230	4 நவம்பர் 2024 & நேரம். காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை	PD வாடிக்கையாளர் சேவை எண் 022 –40081572. M.P.ஜானகிராமன் 9865091118 ஜேம்ஸ் கிளெமென்ட் +917200281906 சொத்து பார்வையிடும் நாள்: 30 அக்டோபர் 2024 நேரம் காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை

சொத்து விவரம்

அனைத்து துண்டு மற்றும் பகுதி செங்கல்பட்டு பதிவு மாவட்டம், இணை 2 SRO, வண்டலூர் தாலுக்கா, எண்.14 பெருமாட்டுநல்லூர் கிராமம், SF எண்.2/2A பட்டா எண்.225, துணைப்பிரிவு SF எண், 257A, பட்டா எண்.2287, துணைப் பிரிவு SF எண்.2/57B பகுதியில் மொத்த அளவீடுகள் 5459 சதுர அடி 2729.5 சதுர அடியுடன் 700 சதுர அடி RCC கட்டிடத்துடன் சொத்து அமைந்துள்ளது. பின்வரும் எல்லைகளவன: கிழக்கு: NP நகர் லேஅவுட், மேற்கு: 5 அடி பாதை மற்றும் கோபால் மற்றும் பிறருக்கு சொந்தமான சொத்து, வடக்கு: P.சிவசங்கருக்கு சொந்தமான சொத்து மற்றும் பொதுவான பாதை தெற்கு: பிள்ளையார் கோவில் தெரு மற்றும் பஞ்சாயத